[திரு. இராம வீரப்பன்] [1994 ஏப்ரல் 5

மத்திய அரசு 28-12-1991 முதல் அரிசியின் விலையை கிலோ ஒன்றுக்கு 88 காசுகள் வீதம் உயர்த்தியபோது, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சாதாரண ரக அரிசியின் விலையை மட்டும் உயர்த்தவே இல்லை. ஆனால், மறுபடியும் 11-1-1993 அன்று. மத்திய அரசு அரிசியின் விலையை கிலோ ஒன்றுக்கு 60 காசுகள் வீதம் உயர்த்தியபோது மட்டுமே, சாதாரண ரக அரிசி உட்பட எல்லா ரக அரிசியின் விலையையும் தமிழக அரசு கிலோ ஒன்றுக்கு 50 காசுகள் வீதம் 1-3-1993 முதல் உயர்த்தி இறுதியாக நிர்ணயித்தது. எனவே, 4-4-1994 அன்று நான் பேரவையில் நிகழ்த்திய உரையில் மேற்கண்டவாறு திருத்தங்களைச் செய்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

8. கவன ஈர்ப்பு

(அ) கரூர் பகுதியில் நெசவாளர் தொடர் போராட்டங்களினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருமதி கே. மரியம் உல் ஆசியா, இருக்கையில் இல்லை, ஆகவே அவருக்குப் பதிலாக டாக்டர் சு. மணிமேகலை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். ஆனால் அவர் இதில் கேள்வி கேட்க முடியாது. அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். திருமதி மணிமேகலை.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூரிலும், கரூர் அதன் சுற்றுப் பகுதியிலும் நெசவாளர்கள் நடத்தும் தொடர் போராட்டங்களினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு" குறித்த அவசரப் பொது முக்கியவத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

நாடு முழுவதும் பஞ்சு விலையேற்றத்தின் காரணமாக நூலின் விலை உயர்ந்துள்ளது. தனியார் நெசவாளர்களுக்கும் நூல் தாராளமாக

1994 ஏப்ரல் 5] [திரு. இ. மதுசூதனன்]

கிடைத்த போதிலும், நூல் விலை, உற்பத்தி பொருளின் விலைக்கு மாறாக அமைந்த காரணத்தால் உற்பத்தியாளர்கள் இதனால் ஏற்படும் இழப்பினை தவிர்க்கவும், தங்களது எதிர்ப்பினை சாத்வீகமாக அரசுக்கு தெரிவிக்கவும் வேலை நிறுத்தத்தினை மேற்கொண்டனர். திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் பகுதி தனியார் ஜவுளி உற்பத்தியாளர்கள் 16-3-1994 காலை 10.00 மணியளவில் கரூர் தலைமை தபால் அலுவலகம் முன்பு நூல் விலை உயர்வினை எதிர்த்து மறியல் போராட்டம் நடத்தினர். மேலும் 16-3-1994 முதல் 20-3-1994 முடிய கடையடைப்பும் செய்தனர். இக்கடையடைப்பின்போது, தனியார் ஜவுளி உற்பத்தியாளர்கள் எவரும் நூல் வாங்கவில்லை. தீர்ந்த சரக்குகள் அனுப்பவில்லை. மற்றும் இது தொடர்பாக எவ்வித வியாபாரமும் செய்யவில்லை. ஒரு சில உற்பத்தியாளர்கள் வியாபாரம் செய்ய முயன்றபோது தடுக்கப்பட்டு அவர்களின் கடைகளும் அடைக்கப்பட்டன. 21-3-1994 முதல் தனியார் ஜவுளி உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்தியினை மீண்டும் வழக்கம்போல் செய்து வருகின்றனர். எனவே தனியார் நெசவாளர்களின் 16-3-1994 முதல் 20-3-1994 முடிய 5 நாட்கள் உற்பத்தி பாதிக்கப்பட்டது. இப்போராட்டத்தினால் சமூக பாதுகாப்பிற்கு எவ்வித அசம்பாவிதமும் ஏற்படவில்லை. தற்போது நிலைமை சீரடைந்து நெசவாளர்கள் வழக்கம்போல் தங்களது தொழிலினை செய்து வருகின்றனர்.

கூட்டுறவுத்துறையின் கீழுள்ள நெசவாளர்களுக்கு எவ்வித தொழில் இழப்பும் ஏற்படவில்லை.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மணிமேகலை, நீங்கள் இதில் கேள்வி கேட்க முடியாது. அமைச்சர் அவைக்குத் தகவலை வைத்துவிட்டார்கள் அவ்வளவுதான்.

(ஆ) சிதம்பரம், அரசினர் நந்தனார் மாணவர் விடுதியில் ஒரு மாணவர் இறந்ததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் என்.ஆர். ராஜேந்திரன், செ. ஆறுமுகம், செ.கு. தமிழரசன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார். திரு. என்.ஆர். ராஜேந்திரன்.